● மே தினக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி ஸ்ரீமாவோ

# வாக்குச்சீட்டைக் கட்டாகப் போடுவதற்கு ஐ. தே. க. ஆட்களை நியமித்துள்ளது


பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4 = 50

# முரசொலி

முரசு 05 ஒலி 156 பிரசோற்பத்தி சித்திரை 20 (03-05-1991) வெள்ளி


''ஜனாதிபதி பிரேமதாஸ நாட்டிற்கு பல நன்மைகள் செய்கிறார் என்றால் அவர் ஏன் நாளொன்றுக்கு நான்கு ஐந்து மேடைகளில் பிரசாரம் செய்கின்றார்.'' இவ்வாறு நேற்று முன்தினம் கம்பல் பார்க்கில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தின கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா தெரிவித்தார். ''வடக்குக் கிழக்கில் யுத்த முனையில் உள்ள படையினருக்கு அரசு போதிய ஆயுதங்கள் வழங்கவில்லை. ''வடகிழக்கு பிரச்சினை நாளுக்கு நாள் விஸ்வரூபம் எடுக்கிறது. இதனால் முழு தென் பகுதியுமே அஞ்சவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பிரேமதாஸவின் அரசில் சூதாட்டமும் போதை வஸ்துமே அதிகரித்துள்ளது. நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தல் நேர்மையாக நடக்குமா என்பது கேள்விக் குறியே வாக்குச் சீட்டுகளை கட்டுக் கட்டாக போடுவதற்கு ஐ. தே. க. —04ஆம் பக்கம் பார்க்க

# மங்கி பிரிட்ஜில் தாக்குதல்

# 8 படையினர் பலி!

## இரு அதிகாரிகளும் உயிரிழந்தனர்

திருகோணமலையில் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் புலிகள் தொடுத்த உக்கிரமான தாக்குதலின்போது இரு படை அதிகாரிகள் உட்பட ஒன்பது சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

திருமலை - மங்கி பிரிட்ஜ் கடற்படை முகாம் அருகில் வைத்து இந்த மோதல் நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் மேலும் 10 படையினர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அடுத்த மாதம் கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் முடிவடையும் என இராணுவ தரப்பில் தெரிவித்ததாகவும் ஆனால் இது சாத்தியமற்றது என இராணுவ அவதானிகள் கூறியதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது.

## மணலாறில் வை-12 விமானம் தொடர்ச்சியான குண்டுவீச்சு

மணலாறு மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை முதல் கடும் விமானத்தாக்குதல் நடைபெற்றது. இரவு பத்து மணிவரை தாக்குதல் நடைபெற்றது.

ஆண்டான்குளம், கருநாட்டன் கேணி, நாயாறு, செம்மலை, அளம்பில், குமிழமுனை, தனிகபுரம், தண்ணிமுறிப்பு ஆகிய பகுதிகளில் வை- 12 ராட்சத விமானம்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## பூந்தோட்ட இராணுவத்தினர் பேயாடிக்கூழான்குளம் வந்தனர்

நேற்றுக்காலை 8.30மணியளவில் வவுனியா பூந்தோட்டம், தாண்டிக்குளம் இராணுவ முகாம்களில் இருந்து இரு அணிகளாக இருமுனையில் வெளியேறினர்.

சாந்த சோலை என்ற பகுதி நோக்கி படையினர் முன்னேறினர். தாண்டிக்குள இராணுவம் பொதுமக்களை முன்னே

— 4 ஆம் பக்கம் பார்க்க

## ட்ராக்டர் விபத்தில் மூன்று விமானப்படையினர் பலி

மட்டக்களப்பு - வலையிறவு பாலத்தில் ட்ராக்டர் ஒன்று விபத்துக்குள்ளானதால் அதில் பயணம் செய்த மூன்று விமானப்படையினர் உயிரிழந்தனர்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டதாகவும் மற்றையவை வாவியில் சிக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (70)

## மட்டுநகர்ப் பகுதியில் தலையில்லாத முண்டங்கள்

மட்டக்களப்பில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் சடலங்கள் வீசப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

கடந்தவாரம் மட்டும் பத்துக்கும் மேற்பட்ட தலையில்லாத சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் நேற்றும் இரு சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

படையினரிடையே உள்ள

— 4 ஆம் பக்கம் பார்க்க

## கரிகாலனின் சகோதரர் பிளாக் கோப்ராவால் கொலை

மட்டக்களப்பு - சின்னப் போரதீவு என்ற இடத்தில் கடத்திச் செல்லப்பட்ட தொலைத்தொடர்பு திணைக்கள ஊழியர் சற்குருநாதனின் சடலம் சாக்கில் இடக்கக் காணப்பட்டதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன

இச் சடலத்துக்கு அருகில் துண்டுப்பிரசுரம் ஒன்று காணப்பட்டதாகவும் அதில் ''பிளாக் கோப்ரா'' என எழுதப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது..

சற்குருநாதன் மட்டக்களப்பு பகுதி விடுதலைப் புலிகளின் பிரமுகர் கரிகாலனின் சகோதரர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (70)

## சப் இன்ஸ்பெக்டர் உட்பட பொலிஸார் இடைநிறுத்தம்

பொதுமக்கள் செய்த முறைப்பாட்டுக்கு உடன் நடவடிக்கை என்ற காரணத்தால் பொலிஸ் அவசரப்பிரிவைச் சேர்ந்த ஒரு சார்ஜன்ட், இரு கான்ஸ்டபிள்கள் ஆகியோர் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோல பொரல்ல ஆஸ்பத்திரியில் பணிபுரியும் ஊழியரை தமது ரிவால்வரைக் காட்டி பயமுறுத்தினார். என்ற குற்றச்சாட்டில் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். 70

## ஷெல் தாக்குதல்

ஊர்காவற்றுறை பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் குடிமனைகளை நோக்கிஷெல் தாக்குதல்களை மேற்கொண்டுவருகின்றனர். ப-1

## விண்ணிலும் கல்லிலான இயந்திர மனிதன்?

விண்வெளியில் கல்லில் செதுக்கப்பட்டதைப் போன்ற பாரிய முகவடிவமொன்றை சோவியத் செய்மதி ஓர்பிற்றர் - 23 படம் எடுத்து அனுப்பியுள்ளது.

இந்த முகத்தின் வாய்ப்புறமாக சில அசைவுகள் காணப்படுவதாக செய்மதியின் படங்களை ஆராய்ந்த விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த முகவடிவை ஆராய்ந்த சோவியத் விஞ்ஞானியான டாக்டர் பீற்றர் போய்ச் இது இயந்திர மனித இயல்பைக் கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

தற்போது அந்த முகத்தின் வாய் அசைவிலிருந்து வெளியாகும் ஒலியை ஒலிப்பதிவு செய்ய தீவிர முயற்சிகள் எடுக்கப்படுகிறது.

## கிளிநொச்சி, பூநகரி பகுதியில் மேதின நிகழ்ச்சிகள்

கிளிநொச்சி, பூநகரி பகுதியிலும் நேற்று முன்தினம் மே தினம் சிறப்பாக நடைபெற்றது.

பிற்பகல் 3 மணிக்கு இரணைமடுச் சந்தியில் இருந்து ஆரம்பமான பேரணி மாலை 6. 30 மணிக்கு கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தை வந்தடைந்தது. இங்கு கூட்டமும் நடைபெற்றது.

தணுக்காய், வன்னேரிக்குளம் உட்பட கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் கலந்து கொண்டனர்.

பூநகரி வாடியடி மைதானத்தில் பூநகரி ப. நோ. கூ. சங்க பொது முகாமையாளர் ந. பாலசுப்பிரமணியம் தலைமையில் பொதுக் கூட்டமும் நடைபெற்றது.

(ப 6, ம35)

## மன்னாரிலும் மேதின பேரணி மடு அகதிகள் பங்குபற்றினர்

மன்னார் மாவட்டத்திலும் மேதின ஊர்வலம் நடைபெற்றது. மடு அகதி முகாமில் உள்ள அகதிகள் பெரிய பண்டிவிரிச்சான் பாடசாலையில் இருந்து மடு உதவி அரசஅதிபர் பணிமனைக்கு ஊர்வலமாக சென்றனர்.

ஊர்வல முடிவில் பொதுக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. (71)

## அத்தியாவசிய பொருள்களை தீவுகளுக்கு அனுப்ப முடியவில்லை

தீவுப்பகுதி இராணுவ நடவடிக்கைகளையடுத்து அனலைதீவு, நெடுந்தீவு, எழுவைதீவு, ஆகிய பகுதிகளில் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தரை, கடல் போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் கடலால் சூழப்பட்ட இத் தீவுகளுக்கு அத்தியாவசிய பொருள்கள் போய்ச் சேருவதில்லை எனவும் தெரி

— 4 ஆம் பக்கம் பார்க்க

## பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காணமுடியாது - ஜனாதிபதி

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணமுடியாது என்பதை அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்று காலிமுகத்திடலில் நடைபெற்ற ஐ தே. க மேதினக் கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி பிரேமதாஸ குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர் ஜே.வி.பி பிரச்சினை தீர்ந்து விட்டது வடக்கு கிழக்கு பிரச்சினை தான் இப்போது உள்ளது.

சமாதானப்பேச்சுக்கள் மூலம்

— 4 ஆம் பக்கம் பார்க்க

# பங்களாதேஷில் வீசிய பயங்கரச் சூறாவளியால் பலியானோர் தொகை ஒரு லட்சமாக அதிகரிப்பு!

பங்களாதேஷில் கடந்த திங்கட்கிழமை வீசிய சூறாவளியில் இறந்தோரின் தொகை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே போகிறது.

இந்தச் சூறாவளியில் இறந்தோர்தொகை சுமார் ஒரு லட்சமாக இருக்கலாமெனத் தற்போது அஞ்சப்படுகிறது.

லட்சக் கணக்கானோர் இந்தச் சூறாவளியினால் காணாமற் போயுள்ளனர். 20 அடி உயரத்திற்கு எழும்பிய கடல் அலைகளினால் இவர்கள் இழுத்துச் செல்லப்பட்டிருக்கலாமெனவும் அஞ்சப்படுகிறது.

சுமார் ஒரு லட்சம் பேர் சூறாவளி, கடல்அலைத் தாக்கங்களினால் தமது வீடுகளை இழந்துள்ளனர். பல தீவுகள் தொடர்ந்தும் நீரில் மூழ்கியே உள்ளதாகவும், மேலும் பல தீவுகளுடனான தொடர்புகள்மீளவும் ஏற்படுத்தப்படவில்லை எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் இறந்தோரின் தொகைபற்றிச் சரியான தகவல்களைப் பெறமுடியாதுள்ளது.

நூற்றி நாற்பது மைல் வேகத்தில் வீசிய புயற் காற்றினால் நங்கூரமிடப்பட்டிருந்த பல கப்பல்கள் மூழ்கிப் போயுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

இறந்தோரில் 3000 பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன. ஒரு மாவட்டத்தில் மட்டும் 25,000 பேர் பலியாகியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## புதிய ரக வெள்ளைநிறக் கடற்பறவை நியூசிலாந்து தீவில் கண்டுபிடிப்பு

புதியரக கடற்பறவை இனமொன்று நியூசிலாந்தின் காரிட்லைன் தீவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வெள்ளை நிறத்தையுடைய இப் பறவை இனம் இதுவரை கண்டுபிடிக்காத வகையைச் சேர்ந்ததென உலகப் பறவைகள் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# தமிழகம் பள்ளிப்பட்டியில் ஒரே தொகுதியில் 422 பேர் போட்டி

தமிழகத்தில்பள்ளிப்பட்டுத் தொகுதியில் எதிர்வரும் சட்டசபைத் தேர்தலுக்கு இம்முறை வழமைக்கு மாறாக மிகப் பெரிய வாக்குப்பெட்டிகள் வைக்கப்படவுள்ளன.

இத் தொகுதியில் வாக்களிப்பின் போது பயன்படுத்துவதற்கென இரண்டரை அடி உயரமும், இரண்டரையடி அகலமும் கொண்ட பெரிய பெட்டிகள் தற்பொழுது விசேடமாகத் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

செங்கை அண்ணா மாவட்டத்தில் அமைந்துள்ள பள்ளிப்பட்டுத் தொகுதியில் சட்டசபைத் தேர்தலில் மிக அதிகமாக 422 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றமையே இதற்குக் காரணமாகும்.

# ஊரடங்கு

வவுனியா மாவட்டத்தில் வவுனியா நகரம், வவுனியா தெற்கு சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நேற்றுப் பகல் 10. 30 மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் சில பகுதிகளில்தொடர்ந்தும் ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழீழ காவல் துறை பதவி வெற்றிடம்

1. கணக்கு லிகிதர்

வயது : 25 - 45.

தகைமை: கணக்குத் துறையில் குறைந்தது 5 வருட அனுபவம் இருத்தல்வேண்டும்

2. நிர்வாக உத்தியோகத்தர்

தகைமை: நிர்வாகத் துறையில் அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

பொறுப்பாளர்
தமிழீழக் காவல்துறை

05006

## தமிழீழக் காவல்துறை பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம்

காவலர்களுக்கான தகைமைகள்:

1. வயது எல்லை 18 வயது முதல் 30 வயது வரை
2. உயரம் 5 அடி 6 அங்குலம்
3. கல்வித்தகைமை எட்டாம் வகுப்பு முதல் க. பொ. த (சாதாரணம்) க. பொ. த, (உயர்தரம்) வரை.

விண்ணப்பதாரிகள் இம்மாதம் 7-5-91 இற்கு முன்பு தமிழீழ விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் யாழ் பிரதேசக்காரியாலயத்தில் சான்றிதழ் பிரதிகளுடன் சமுகமளிக்கவும்.

பொறுப்பாளர்
தமிழீழக் காவல்துறை

05008

## வெரித்தாஸ் நேரம் நீடிப்பு

வெரித்தாஸ்வானொலி ஒலிபரப்பின் நேரம் ஐந்து நிமிடங்களினால் அதிகரிக்கப்பட்டுள்ளது

இதுவரை காலமும் இரவு ஒலிபரப்பு 7,30 மணி முதல் 7,55 மணி வரை இடம் பெற்று வந்தது. கடந்த 28ஆந் திகதி முதல் இரவு ஒலிபரப்பு 8 மணி வரை ஐந்து நிமிடங்கள் நீடிக்கப்பட்டுள்ளது.

காலை ஒலிபரப்பு வழமை போல் 6 00 மணி முதல் 6 25 வரை இடம் பெற்றுவருகின்றது.

## சங்கக்கிளை நிர்வாக மாற்றம்

வவ்னேரிக்குளத்தில் இயங்கி வந்த பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் இலைவிற்பனை நிலையம் தற்பொழுது கிளிநொச்சி-கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதுவரை இக்கிளை துணுக்காய் ப நோ. கூ. சங்கத்தினால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. கிளி—முல்லை மாவட்ட எல்லையில் அமைந்துள்ள வவ்னேரிக்குளப் பகுதி மக்களின் வேண்டுகோளையடுத்தே இவ்விரு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் ஒருமித்து இவ் நடவடிக்கையினை எடுத்துள்ளனர்.

வவ்னேரிக்குளம் கிளைக்கான தேர்தல் புதிதாக விரைவில் நடாத்தப்படுமென கிளி. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் க. பஞ்சலிங்கம தெரிவித்தார்.

## கடும் காற்று மரங்கள் பாதிப்பு

தற்போது வீசி வரும் பலத்த காற்றினால் வடமராட்சிப் பகுதியில் வாழை, முருங்கை, பனை மரங்கள் என்பன முறிந்து விழுந்துள்ளன.


பயன் தரும் இம் மரங்கள் பெருமளவு முறிந்து விழுந்ததினால் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. (50

## மீன் விலை அதிகரிப்பு

வடமராட்சிப் பகுதியில் மீனின் விலை அதிகரித்துள்ளது.

அண்மைக்காலத்தில் கடற்பகுதியில் இருந்து வரும் நெருக்கடியினால் மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல அச்சப்படுவதாலேயே மீனுக்குத் தட்டுப்பாடும் விலைஉயர்வும் ஏற்படக் காரணமாகும். (50)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி சிவமலர் ஆறுமுகம்

(முருகன் அருள்பிரவாகம் நல்லூர்)

| மலர்வு | இறைவன் திருவடி |
|---|---|
| 20. 12. 1965 | 19. 4. 1984 |

எழும் போதும் வேலும் மயிலும் என்பேன்
எழுந்தே மகிழ்ந்து தொழும் போதும் வேலும் மயிலும் என்பேன்
தொழுதே உருகி அழும் போதும் வேலும் மயிலும் என்பேன்
அடியேன் உடலம் விழும் போதும் வேலும் மயிலும் என்பேன்

செந்தில் வேலவனே,

முருகன் அருள் பிரவாகம்
171/10 கோயில் வீதி,
நல்லூர்.

நீங்காத நினைவுகளுடன்
அன்பான அப்பா, அம்மா,
சகோதரர்கள், மருமக்கள்.

05014

## 45வது நாள் நினைவஞ்சலி



### வீரவேங்கை சோமன்

### செல்வன் வி. இராசேந்திரன்

(கல்வயல், சாவகச்சேரி)

| தாயின் மடியில்: | தாயக மண்ணில்; |
|---|---|
| 02. 11. 1975 | 20. 03. 1991 |

மறைந்தும் மறையாத எமது அன்புச் செல்வமே! எங்கள் நெஞ்சிருக்கும்வரை நினைவிருக்கும் புன்னகை நிறைந்த உன் எழில் முகத்தை எங்கே நாம் காண்போம். நீண்ட நாட்கள் காணாமல் ஏங்கித் தவித்து உன் வரவை எதிர்பார்த்த எங்களுக்கு இந்த சோகச் செய்திதான் கிடைத்ததா? உன் புகழுடம்பைத்தான் நாங்கள் காண முடிந்தது. ஆனால் நீ வீரப்புலி! ஆனாய். விடிவுக்கு விதையானாய்!

மன்னார் சிலாவத்துறை இராணுவ முகாம் தகர்ப்பின்போது வீரமரணமடைந்த வீரவேங்கை சோமன் அவர்களுக்கும் அவருடன் வீரமரணமடைந்த ஏனைய போராளிகளுக்கும் எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வீரவேங்கை சோமன் அவர்களின் வீட்டுக்கிருத்தியம் 03. 05 1991 வெள்ளிக்கிழமை பகல் நடைபெறும். போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

"இந்திரபவனம்"
கல்வயல்
சாவகச்சேரி.

இங்ஙனம்
தாய், தந்தை,
சகோதர, சகோதரிகள்.

05013

# பற்றறியைத் தேடி அலைவானேன்; வீசுங்காற்றையும் மின் ஆக மாற்றலாம் வீட்டில் இலவசமாக வானொலியை இயக்க மற்றுமொரு சிக்கனவழி இது

தற்பொழுது வேகமாக வீசும் காற்றைப் பயன்படுத்தி வீட்டில் வானொலிக் கருவியை இயக்குவதற்கான மின்சாரத்தைப் பெறும் இலகுவான முறையொன்றை ஆனைக்கோட்டை புளியங்கட்டுப் பிள்ளையார் கோவில் ஒழுங்கையைச் சேர்ந்த மார்க்கண்டு அருணகிரிநாதன் என்ற உயர் வகுப்பு மாணவன் அறிமுகப்படுத்தியுள்ளார்.

இந்தமுறை மூலம் தொடர்ச்சியான மின்சாரத்தைப் பெறுவதற்கு நீங்கள் முதலில் 15 சென்ரிமீற்றர் நீள அகலத்தைக் கொண்ட மெல்லிய சதுரத் தகரத் துண்டொன்றை எடுத்துக் கொள்ளுங்கள். அதனைத் தற்பொழுது சிறுபிள்ளைகள் விளையாட்டுக்குப் பயன்படுத்தும் காற்றாடி போல் மாற்றியமைத்துக் கொள்ளுங்கள்.

அதன் பின்னர் 6 வோல்ட் அல்லது 12 வோல்ட் சைக்கிள் டைனமோ ஒன்றின் சுழலும் தலைப்பகுதியில் இந்த தகரக் காற்றாடியின் மையப் பகுதியை இறுக்கமாகப் பொருத்தி, டைனமோவை ஒரு இரும்புக்கம்பியில் அல்லது தடியில் பொருத்தி வீட்டுக்கு வெளியே காற்றோட்டமான இடத்தில் நிலையாக நிறுத்திவிடுங்கள்.

வேகமாக வரும் காற்று காற்றாடியை சுழற்ற அதனுடன் சேர்ந்து டைனமோவும் சுழற்றப்பட உற்பத்தியாகும் மின்சாரத்தை கருத்த கொண்டென்சர் பொருத்திய வயர் ஒன்றின் மூலம் மோட்டார் சைக்கிள் மின்கலம்ஒன்றில் நீங்கள் சேமித்துக் கொள்ளலாம். காற்றின் வேகத்திற்கு ஏற்ப கூடக்குறைந்து வரும் மின்சாரம் கலத்தில் சேமிக்கப்படுகிறது. கலத்துடன் உங்கள் ரேடியோவுக்கு இணைப்பைக் கொடுப்பதன் மூலம் தடையின்றி, தொடர்ச்சியாக வானொலியை இலவசமாகவே நீங்கள் இயக்க முடியும். மின்கலத்திலிருந்து மின்சக்தி குறையக் குறைய காற்றாடிமூலம் உற்பத்தியாகும் மின்சாரம் அதனை ஈடுசெய்து கொண்டிருக்கும்.

## ஆசிரிய இடமாற்றங்கள் ஒத்திவைப்பு!

## புதிய திட்டம் விரைவில் அமுலுக்கு வரும்

சமீபத்தில் செய்யப்பட்ட சகல ஆசிரிய இடமாற்றங்களும் கால வரையறையின்றிப் பிற்போடப்பட்டுள்ளதாக உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

எதிர்காலத்தில் ஆசிரிய இடமாற்றங்கள் அனைத்தும் புதிய திட்டங்களுக்கு அமையவே மேற்கொள்ளப்படவுள்ளன. அதற்கு ஏதுவாகவே ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆசிரிய இடமாற்றங்கள் அனைத்தும் பிற்போடப்பட்டுள்ளன.

இந்த இடமாற்றங்கள் அனைத்தும் மீள்பரிசீலனை செய்யப்பட்டு புதிய திட்டத்திற்கு அமைவாக புதிய இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டுநகரில் மர்ம மரணங்கள்; கறுப்புச் சட்டை கருநாகமாகிறது

மட்டக்களப்பு நகர்ப்பகுதிகளில் தமிழ் மக்கள் காணாமற்போவதற்கும், இவ்வாறு காணாமற்போவோரில் சிலர் கொலைசெய்யப்பட்டு வீதிகளில் வீசப்படுவதற்கும் 'கறுப்புநாகம்' என்ற அமைப்பே காரணமாம்.

மட்டுநகர வீதியில் இவ்வாறு கொலைசெய்யப்பட்டு வீசப்படும் தமிழர்களின் சடலங்களுக்கருகில் கறுப்பு நாகம் என்ற வாசகமும் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இறுதியில் காணாமற்போகும் சம்பவங்களுக்கு அங்குள்ள அரச படையின் இரகசியப் பிரிவான கறுப்புச்சட்டைப் பிரிவே காரணம் என அண்மையில் வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்று குற்றஞ்சாட்டியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## பறிமுதலான எம். வி. மதலினாவை திருப்பிக்கொடுக்க ஆலோசனை

பிரகடனப்படுத்தாத 300 மில்லியன் அமெரிக்க டாலர் பெறுமதியான பதினோராயிரம் றொக்கட் மோட்டாரைக் கொழும்புத் துறைமுகத்துக்குள் ஏற்றி வந்தமைக்காக எம். வி. மதலினா என்ற இத்தாலியக் கப்பல் இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்டதுடன், அக்கப்பலின் கப்டனுக்கு மூன்று லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டிருந்தமை வாசகர்கள் அறிந்ததே.

இருப்பினும் உரிமையாளர் மனுச்செய்யும் பட்சத்தில் இக்கப்பலை மீள வழங்குவது பற்றி ஆராயப்படுமென சுங்க இயக்குநர் நாயகம் கினகம தற்பொழுது தெரிவித்துள்ளார்,

கப்பலின் உரிமையாளர் இதுவரை தம்முடன் தொடர்பு கொள்ளவில்லை எனவும் தெரிவித்தார். (56)

## ஏப்ரல் புள்ளி 1114.2

ஏப்ரல் மாதத்திற்குரிய வாழ்க்கைச் செலவுப் புள்ளி 1114 2 என கணிக்கப்பட்டுள்ளது குடிசனமதிப்புப்புள்ளி விபரத்திணைக்களம் இந்தக் கணக்கெடுப்பை மேற்கொண்டது.

## கூட்டுத்தாபன நிதித்துறை நடைமுறைகள் மாற்றப்படும்

அரசாங்கக்கூட்டுத் தாபனங்களின் நிதித்துறை நடைமுறைகள் மாற்றப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு ஏதுவாக இலங்கையின் நிதிச்சட்டம் திருத்தியமைக்கப்படவுள்ளது.

புதிய திருத்தத்தின் படி திறைசேரி அல்லது கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் அதிகாரி ஒருவர் கூட்டுத்தாபனங்களின் நிர்வாக சபைக்கு நியமிக்கப்படுவர்.

அத்துடன் எந்த ஒரு அரசாங்கக்கூட்டுத்தாபனமும் நிதியாண்டு ஆரம்பமாவதற்கு ஒருமாதத்திற்கு முன்பு தத்தமது வரவு செலவுத்திட்டத்தைத் தயாரித்து அங்கீகாரத்தைப் பெறல் வேண்டும்.

## சுங்கப்பகுதி நடவடிக்கையில் - ஜனாதிபதி தலையிடுவதாக வாசுதேவ குற்றச்சாட்டு

சுங்கப் பகுதியின் நடவடிக்கைகளில் ஜனாதிபதி அனாவசியமாகத் தலையிட்டுள்ளதாக நவசமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவநாணயக்கார குற்றம் சாட்டியுள்ளார்.

சுங்கப் பகுதியால் கைப்பற்றப்பட்ட துணிவகைகளை ஜனாதிபதியின் தலையீட்டினால் சுங்கப்பகுதி இயக்குநர் நாயகம் லலித் கினகம மீளக் கையளித்துள்ளார் எனவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

## வை. ஜி. பி. காலமானார்

தமிழக திரைப்பட, நாடகக் கலைஞர் வை ஜி பார்த்தசாரதி 74 வது வயதில் கடந்த செவ்வாய் சென்னையில் காலமானார்.

## 'உண்மையின் குரல்' ஊடாக மணிலாவிலிருந்து ஈழப்புரட்சிக் கீதங்கள்

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவிலிருந்து ஒலிபரப்பாகும் வெரித்தாஸ் தமிழ்ப் பணியில் ஈழப்புரட்சிப் பாடல்களும் ஒலிபரப்பப்படுகின்றன. ஞாயிற்றுக்கிழமை மாலை 7.30 மணியிலிருந்து 8 00 மணிவரை ஒலிபரப்பாகும் "இசைத்தேன்" நிகழ்ச்சியில் இலங்கைப்புரட்சிக் கீதம் என்ற மகுடத்துடன் வெரித்தாஸ் வானொலி ஈழப்புரட்சிப் பாடலையும் ஒலிபரப்புச் செய்கின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந் நிகழ்ச்சியில் கவிஞர் காசிஆனந்தன் இயற்றிய புரட்சிப் பாடல் ஒன்று ஒலிபரப்பப்பட்டது.

ஈழத்தமிழரின் மீது நல்ல அபிமானம் கொண்ட இவ் ஒலிபரப்புச் சேவை ஈழத்தமிழர்களுக்கு நிம்மதியும், விடுதலையும் கிடைக்கவேண்டும் என்ற பிரார்த்தனை இடம்பெறுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் மாலை "இதயம் இணைகிறது" என்ற நிகழ்ச்சியில் இப்பிரார்த்தனையும் ஒலிபரப்பாகிறது.

ஆசிய கத்தோலிக்க ஆயர்கள் மன்றத்தினால் நடாத்தப்படும் 'வெரித்தாஸ்' ஒலிபரப்பினை பல நாடுகளையும் சேர்ந்த பெருந்தொகையான மக்கள் தினம்தோறும் கேட்டு வருகின்றனர். 'வெரித்தாஸ்' என்ற லத்தீன் சொல் 'உண்மையின் குரல்' என்றபொருள் கொண்டது என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது. (54)

## வீரவணக்கம்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கரவெட்டிக்கும் மகிழவெட்டுவானுக்கும் இடையில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் 4 போராளிகள் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டனர்.

தீசன் (வி. யோகராசா, மண்டூர்) குணசீலன் (பா. கணேசமூர்த்தி, கோவில்போரதீவு) ராம்குமார் (புவனநாதன், மகிழடித்தீவு) விக்கினேஸ் (புல்லுமலை) ஆகியோரே வீரமரணத்தைத் தழுவியவர்களாவர்.

கடந்த புதனன்று மகிழடித்தீவில் நடந்த மோதலில் பரமானந்தன் (க. மனோகரன், பழுகாமம்) வீரமரணமடைந்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஓமந்தை முதலாம் கட்டையில் இருபொம்மர், 2 ஹெலி என்பன விமானத் தாக்குதல் நடாத்தியதில் வல்லவன் (வைரப்பெருமாள், பாலலிங்கம், ஓமந்தை) எனும் போராளி வீரமரணமடைந்தார். இதில் ஒரு பொதுமகன் கொல்லப்பட்டதுடன், 3 பொதுமக்கள் காயமடைந்தும் உள்ளனர்.

## சென்னை விமான நிலையத்தில் தொடரும் விசித்திர மோதல்கள்!

ஒரே வாரத்தில் சென்னை விமான நிலையத்தில் இரண்டாவது விசித்திர விபத்து நிகழ்ந்துள்ளது

கடந்த செவ்வாய் இரவு விமான நிலையத்தில் விமானத்துடன் உழவு இயந்திரமொன்று மோதி உழவு இயந்திரச் சாரதி மரணமடைந்திருந்தமை பற்றிய செய்தி முரசொலி வாசகர்கள் அறிந்ததே.

அதனைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் நள்ளிரவு பம்பாயிலிருந்து சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தை வந்தடைந்த ஏயர்பஸ் விமானம் ஓடுபாதையையும் தாண்டி விமான நிலையத்திற்கு அருகில் அமைந்திருந்த பாலமொன்றுடன் மோதிச் சேதமடைந்தது. இந்த விபத்தின்போது விமானத்திலிருந்த 240 பயணிகளும் மயிரிழையில் உயிர் தப்பினர்.

## வி. பி. சிங் புத்திசித்தம் குறைந்தவராம் தேர்தலிலிருந்து விலக்குமாறும் மனு!

முன்னாள் இந்தியப் பிரதமர் வி. பி. சிங் புத்தி சித்தம் குறைந்தவர் எனவும் எனவே நடைபெறவுள்ள தேர்தலில் அவர் போட்டியிடாதவாறு தடுக்கவேண்டுமெனவும் டில்லி உயர் நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சக்சேனா என்ற சட்டத்தரணியே இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

வி பி சிங் இன் முரண்பாடான அறிக்கைகளை ஆதாரமாகக் கொண்டு அவர் புத்திசுவாதீனமற்றவர் என்ற வகையில் சக்சேனா இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். (50)

## தொழிலாளர்தின எழுச்சி; ரஷ்யாவைப்பின்தள்ளி தமிழீழம்சாதனை

சோவியத் யூனியன் ஜனாதிபதி திரு. மிகையில் கொர்பச்சேவ் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மேதின விழாவில் சுமார் 20 ஆயிரம் வரையிலான மக்களே கலந்து கொண்டதாக ஏஜென்ஸிச் செய்தி ஒன்று தெரிவித்தது

மிகப் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் இவ்விழாவில் எதிர்பார்க்கப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தொழிலாளர் புரட்சி வெடித்த தேசம், தொழிலாளர் நலன் பேணும் தேசம் என்றெல்லாம் ரஷ்யா வர்ணிக்கப்படுகின்றது.

இதேவேளை தமிழீழத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மேதின எழுச்சி ஊர்வலத்தில் மூன்று இலட்சம் மக்கள் கலந்து கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் சகலமாவட்டங்களிலும் நிறுவப்படும்

சகல மாவட்டங்களிலும் கூட்டுறவுப்பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இந்தப் பயிற்சி நிலையங்களில் தற்பொழுது கூட்டுறவுத் துறையில் உள்ள ஊழியர்களுக்கும், புதியவர்களுக்கும் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

எதிர்காலத்தில் கூட்டுறவுத் துறைகளில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்களே நியமிக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (50)

# யாழ் பிரதம தபாலகத்தில் தீவுப்பகுதி தபால்கள் தேக்கம்

கொழும்பிலிருந்து கப்பலில் வந்ததபால்பொதிகளில் தீவுப்பகுதி தபாலகங்களுக்கான தபால் பொதிகள் யாழ் பிரதம தபாற்கந்தோரில் தேங்கிக்கிடக்கின்றன.

அல்லைப்பிட்டி உப தபாலகம் மட்டும் யாழ்பிரதம தபாலகத்தில் இயங்குவதால் அப்பகுதி மக்கள் தமது தபால்களை யாழ் பிரதம தபாலகத்தில் பெற்றுவருகின்றனர்.

ஏனைய தீவுப்பகுதி தபாலகங்களின் கடிதங்களை விநியோகிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (33

# இன்று தபால்கள் விநியோகம்

லங்காசிறி கப்பலில் வந்த 176 தபாற் பொதிகளில் வடமராட்சி பகுதி தபால்களைத் தவிர ஏனையவை நேற்று யாழ் பிரதம தபாற்கந்தோருக்கு எடுத்துவரப்பட்டு தரம் பிரிக்கப்பட்டன.

இவை ஏனைய தபாற்கந்தோர்களுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

யாழ் பிரதம தபாற்கந்தோர்பகுதி தபால்கள் இன்று விநியோகிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று முன்தினம் பருத்தித்துறைக்குவந்த குமணகப்பலிலும் யாழ் குடாநாட்டுக்கான 150 தபால் பொதிகள் வந்து சேர்ந்துள்ளன.

இத்தபால் பொதிகள் தரம் பிரிக்கப்பட்டு திங்கட்கிழமை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. 33

# முல்லைத்தீவு மாவட்டத்துக்கு மண்ணெண்ணெய் வரும்

முல்லைத்தீவில் ஏற்பட்டு வரும் மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டை நீக்க அரசாங்க அதிபர் கே. பொன்னம்பலம் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

தற்போது கொழும்பில் தங்கியுள்ள இவர் பத்து லொறிகளில் 40 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெய் எடுத்து வருவது சம்பந்தமாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருடன் தொடர்பு கொண்டுள்ளார்.

மேலும் இம்மாவட்டத்திற்கு பல லொறிகளில் உணவுப் பொருள்கள் எடுத்து வரப்படவுள்ளதாகவும் முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் வி. கந்தசாமி தெரிவித்தார். (38)

# மன்னார் உ. அ. அ. பிரிவில் கிராமசேவகர் இடம்பெயர்வு

மன்னார் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடமை புரியும் 49 கிராமசேவையாளர்களில் தற்போது 15 கிராம சேவையாளர்களே கடமைக்கு வருவதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களில் 16 முஸ்லிம் கிராம சேவகர்களும், 18 தமிழ் கிராம சேவகர்களும் இடம்பெயர்ந்து சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இப்பகுதி மக்களின் தேவைகளைக் கவனிக்க ஒரு கிராமசேவகர் பல பிரிவுகளில் பணிபுரிய வேண்டிய நிலை இருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (33)

# மன்னார் பெண் ஊழியர் மாகாண சபைக்கு விண்ணப்பம்

மன்னார் பகுதி அரச அலுவலகங்களில் பணிபுரியும் யாழ் மாவட்டப்பகுதி பெண் ஊழியர்கள், தாம் அங்கு போக முடியாத நிலைமைகள் குறித்து வடகிழக்கு மாகாண அமைச்சுக்கு கடித மூலம் விண்ணப்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து அங்கு போவதற்குரிய போக்குவரத்து வசதியீனங்கள், ஊரடங்குச்சட்டம், விமானத் தாக்குதல் போன்றவற்றைக் குறிப்பிட்டு தமக்கு யாழ் மாவட்டத்தில் பணிபுரிய ஏற்பாடு செய்ய வேண்டும் என விண்ணப்பித்துள்ளனர். (33)

# அமைச்சர் லலித் செய்தியாளரிடம் தகவல்:

# உதவி ஆசிரியர்களுக்கு இனிமேல் புள்ளியடிப்படையில் பதவியுயர்வு

உதவி ஆசிரியர்களாக சேர்ந்து உதவி ஆசிரியர்களாகவே நீண்டகாலம் பணிபுரிந்து ஓய்வுபெறும்இன்றைய ஆசிரிய பதவி நடைமுறைகளை மாற்றியமைக்க புதிய திட்டமொன்று செயற்படுத்தப் படவுள்ளதாக கல்வி உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி செய்தியாளரிடம் கூறினார்.

இத்திட்டத்தின் மூலம் 1,80,000ஆசிரியர்கள் நன்மை அடைவர் இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இப்புதிய திட்டத்தின்படி ஆசிரியர்கள் ஐந்துதரங்களாக பிரிக்கப்படுவர். அதாவது, புதிதாக ஆசிரியர்களாகசேர்பவர்கள் உதவி ஆசிரியர்கள் 5வது தரத்தில் இருப்பர்.

சகல உதவி ஆசிரியர்களும் 4வது தரத்தில் பதவி உயர்வு பெறத் தகுதி உடையவர்கள் இவர்கள் பதவி உயர்வு பெற 10 புள்ளிகள் பெறவேண்டும். சிறப்பு பட்டதாரிக்கு-6புள்ளிகள், பொதுப்பட்டதாரிக்கு - 5 புள்ளிகள், ஆசிரிய பயிற்சி சான்றிதழ் உள்ளவருக்கு - 3 புள்ளிகள், டிப்ளோமாவுக்கு - 2 புள்ளிகள் என்ற ரீதியில் ஒவ்வொரு வருட சேவைக்கும் ஒரு புள்ளி என்ற ரீதியில் மேற்படி புள்ளிகள் புதிய திட்டப்படி வழங்கப்படலாம் எனவும் கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. 33

# 2ஆம் தவணை பாடசாலைகள் மே20 இல் ஆரம்பமாகிறது

யாழ் மாவட்டப் பாடசாலைகள் அனைத்தும் இரண்டாம் தவணைக்காக இம் மாதம் 20 ஆம் திகதி முதல் ஆரம்பமாகின்றது என கல்விப்பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

மேமாதம் 6 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை நடாத்தப்படாத பாடசாலை நாட்கள் வருகின்ற தவணைகளில் சனிக்கிழமைகளில் நடாத்திமுடிக்க வேண்டுமென பாடசாலை அதிபர்களுக்கு கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ப-11)

# புங்குடுதீவு பகுதி மக்களுக்கு சிறாம்பியடியில் கூட்டுறவுக்கிளை

தீவகப்பகுதியில் இராணுவ நடவடிக்கையால் புங்குடுதீவுப் பகுதிகளிலுள்ள மக்கள் இப்பொழுதும் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கு உதவும் முகமாக புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் யாழ் சிறாம்பியடியில் உள்ள மணியம் கட்டிடத்தில் தற்காலிக அலுவலகம் ஒன்றை திறந்துள்ளது.

இந்த அலுவலகத்தில் புங்குடுதீவு மக்கள் தாம் நிவாரணம் பெற்ற இளைகளின் இலக்கத்தை குறிப்பிட்டு தமது பெயர்களை பதிந்து வருகின்றனர்.

இவர்களுக்கான நிவாரணப் பொருள்களை விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. (33 20)

# எம். ஜி. ஆரின் படம் வைத்து கணேசலிங்கத்துக்கு வரவேற்பு

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் ஐ. தே. க. சார்பில் போட்டியிடும் அதன் பொருளாளர் க. கணேசலிங்கத்துக்கு மறைந்த தமிழக முதல்வர் எம். ஜி. ஆரின் உருவப்படம் வைத்து வரவேற்பு அளிக்கப்படுகிறது.

தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதிகளுக்கு திரு. கணேசலிங்கம் தேர்தல் பிரசாரம் மேற்கொண்டு சென்றபோது இவ்வாறு வரவேற்கப்பட்டார். 70)

# 30 பேர்கைது

திருமலை பச்சை நூல் ஆகதி முகாமில் இருந்த முப்பது பொதுமக்களை படையினர் கைது செய்துள்ளனர். இவர்களில் மூவர் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர். 71

# வீரமரணம்

களுவாஞ்சிக்குடி இராணுவத்தினரும தமிழ்குழுக்களும் மகிழூர் கிராமத்தை சுற்றிவளைத்தனர் இங்கு நடைபெற்ற மோதலில் பாலகுமார் கு ஸ்ரீதரன் (பெரியகல்லாறு) வீரமரணம் அடைந்தார். 71

# காலிக்கு இடமாற்றம்

காங்கேசன் சீமெந்து ஆலையிலிருந்து புத்தளம் சீமெந்து ஆலைக்கு சிலருக்கு இடமாற்ற உத்தரவு வந்திருப்பது அறிந்ததே ஆனால்தற்போது மூன்றுபேருக்கு காலி சீமெந்து ஆலைக்கு இடமாற்ற உத்தரவு கிடைத்துள்ளது. 48

# சீனி லொறிகள் வந்தன

யாழ்ப்பாணத்தில் நேற்று லொறிகளில் பெருமளவு சீனி மூடைகள் வந்து சேர்ந்துள்ளன.

யாழ் நகர்ப்பகுதியில் மக்கள் நீண்ட கியூவில் சீனி வாங்க நின்றதைக் காண முடிந்தது.

இதேபோல வவுனியாவிலிருந்து பெருமளவு லொறிகள் யாழ் நோக்கி வந்து கொண்டிருப்பதாக வர்த்தக வட்டாரங்களிலிருந்து தெரிவிக்கப்படுகிறது. (38)

# லங்கா சமசமாஜக்கட்சி

# லஞ்சமும் ஊழலும் இந்த ஆட்சியில் மலிந்துள்ளன

இந்த ஆட்சியில் நாட்டில் லஞ்சமும், ஊழலும் மலிந்து விட்டன என்று லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் பேர்னாட்சொய்ஸா கொழும்பில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

வாழ்க்கைச் செலவு அதிகரித்து, ரூபாவின் பெறுமதி தினமும் குறைகிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

# கப்பலில் வந்த ஆயுதங்கள் தாய்வான் விமானப்படைக்கே

கொழும்புத்துறைமுகத்தில் பெருமளவு ஆயுதங்களுடனும் றொக்கெற் வெடிகுண்டுகளுடனும் தடுத்து வைக்கப்பட்ட கப்பலின் மர்மம் இப்போது வெளியாகிவிட்டது.

தாய்வானை நோக்கிச் சென்று கொண்டிருந்த இந்தக் கப்பலில் காணப்பட்ட மேற்படி இராணுவசாதனங்கள் தாய்வான் விமானப்படைக்காகக் கொண்டு செல்லப்படுகிறதென்பது பொலிஸ் விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது.

இலங்கை தாய்வானுடன் ராஜதந்திரத் தொடர்பு வைத்திருக்காததால் சில தகவல்கள் பெறமுடியாதுள்ளதெனவும் அதிகாரிகள் கூறினர். 33

# இம்முறை முத்திரை வரவில்லை

கொழும்பிலிருந்துவந்த லங்காசிறி கப்பலில் யாழ் குடாநாட்டுக்கான தபால் பொதிகளில் முத்திரைகள் எவையும் வரவில்லையென தபாலகவட்டாரங்கள் தெரிவித்தன.

# விடுதலைப் புலிகள் வெளிவருகிறது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வஏடான விடுதலைப்புலிகள் குரல்-22 நாளை வெளிவருகின்றது.

இவ்விதழில் கடந்த பங்குனி மாதம் சிலாவத்துறை இராணுவ முகாம் மீது நடாத்தப்பட்ட 4 நாள் தாக்குதல் பற்றிய விவரம் அடங்கியுள்ளன.

# 1732 படையினர் பலியாம்!

கடந்த ஜூன் மாதம் ஆரம்பித்த போரில் இதுவரை 1282 படையினர் பலியானதாகவும் 450 படையினர் காணாமற்போய்விட்டதாகவும் முன்னாள் விமானப் படைதளபதி வோல்டர்பெர்னாண்டோ தெரிவித்தார்.

# பேச்சுவார்த்தைக்கு தொண்டமான்

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாண விடுதலைப்புலிகளும் அரசும் சமரசமான பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்று அமைச்சர் தொண்டமான் ஐ தே. க மேதினக் கூட்டத்தில் கூறினார்.

அட்டனில் நடைபெற்ற இ தொ. க. மேதினக் கூட்டத்திலும் அமைச்சர் பேசினார்

# வதந்தியால் கலக்கம்

சுழிபுரம் திருவடிநிலை கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு திடீரெனப் பரவிய வதந்தியால் அப்பகுதி மக்கள் பீதியடைந்து அயல் கிராமங்களை நாடி ஓடியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பூந்தோட்டம்—

...டடு வந்தனர்,

இவர்களுக்கு உதவியாக மூன்று ஹெலிகளும் தாக்குதல் நடாததின முன்னேறிய படையினரை பேயாடிக்கூழான் குளம் பகுதியில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

படையினர்பேயாடிக்கூழான் குளம் சந்தியில் நிலை கொண்டுள்ளனர். 71

பிரச்சினைக்கு...

பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசாங்கம் தயாராக இருக்கிறதுஎன்றும் கூறினார்.

வாக்குச்சீட்டை...

ஆட்களை நியமித்துள்ளது.

அண்மையில் கூட அக்குரனையில் இந்தகைய நபர் ஒருவர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளார்" என அவர் மேலும் தெரிவித்தார்.

மணலாறில்...

அவ்ரோ விமானம், ஹெலிகப்டர் என்பன மாறி மாறி தாக்குதல் நடாத்தின. (71)

அத்துடன் பேச்சுவார்த்தை யுத்தநிறுத்தம் என்றும் கூறும் ஸ்ரீலங்கா அரசின் உள்நோக்கம் என்ன என்பது பற்றியும் தற்போது அமுலில் உள்ள அனுமதிப்பத்திர முறை (பாஸ்) ஏன் அமுல்படுத்தப்படுகிறது என்ற விவரத்துடன் மேலும் பல விவரங்கள் அடங்கியுள்ளன. 71

மட்டுநகர்—

சில அமைப்புகள் மேற்கொள்ளும் இந்தப் பயங்கர சம்பவங்களால் மட்டுநகர் மக்கள் மாலையானதும் வெளியே வர அஞ்சுவதாக பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

அத்தியாவசிய—

விக்கப்படுகிறது.

எரிபொருள் இல்லாமையால் நெடுந்தீவு மக்களுக்கு பிரதேச சபையால் குடிநீர் வழங்கமுடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (74)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ், (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி, "லஷ்மி"பில்டிங்"இல் உள்ள அச்சகத்தில் 03-05. 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.